1973 ஆகஸ்ட் 11]

திரு. ஜே. ஜேம்ஸ் : அதில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் முந்திரிக் கொட்டையிலிருந்து வரும் எண்ணெயினால் பாதிக்கப்பட்டு பல நோய்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, இதை மாற்ற அதனை நடத்தும் முதலாளிகள் இந்த நோய்கள் பரவாமல் தடுக்க மாற்றுத் திட்டங்களைச் செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புதிய தகவல் ஒன்றைத் தருகிறார்கள். அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கந்தர்வக் கோட்டையைச் சுற்றி நிறைய முந்திரித் தோட்டங்கள் இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தி அங்கே முந்திரித் தொழிற்சாலையை ஆரம்பிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எங்கெங்கே இப்படிப்பட்ட வசதி வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் பரிசீலிக்கலாம்.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, உடையார்பாளையத்தில் ஏராளமான சர்க்கார் காடுகள் இருப்பதால் அங்கே ஒரு ஆராய்ச்சி சாலையும், உடைப்புச் சாலையும் ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் முந்திரி வளர்கிறது.

கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி

*69 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறிவியல் கண்ணாடிப் பொருட்களை உருவாக்கும் பயிற்சி நிலையம் ஏதேனும் தமிழகத்தில் தற்போது செயல்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்?

(உ) பயிற்சி நிலையத்தை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். கிண்டியில் ஒரு பயிற்சி நிலையம் செயல்படுகிறது.

(இ) ஒரு அணியில் 20 மாணவர்களுக்கு மேற்படாமல் இரண்டு அணிகளில், மாணவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி பெறுகிறார்கள்.

(உ) பயிற்சி சம்பந்தப்பட்ட வரையில் விரிவாக்கும் திட்டம் இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி நிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு விலைமதிப்புள்ள அறிவியல் கண்ணாடிப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிற்சி நிலையம் பெரும்பாலும் பயிற்சி கொடுக்க இருக்கும். ஆனால் சென்னையிலே இருப்பது மட்டும் உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சியெடுக்கிறோம். எவ்வளவு உற்பத்தி என்ற விவரம் இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, out of the trainees, how many are girl students ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம்தான் இருக்கிறது. ஆண், பெண் விவரம் இல்லை.

* 70 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி வட்டாரத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

விசைக் கலப்பைகள்

* 71 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறிய வயல்களில் உபயோகிக்கத் தக்க பல காரிய விசைக் கலப்பைகளை (power fillers) தமிழகத்திலேயே தயாரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையைத் தஞ்சையிலேயோ, திருச்சியிலேயோ துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : " சதர்ன் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் " என்ற நிறுவனம் 10,000 பவர் டில்லர்ஸ் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு, கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய்க்குத் திட்டமிட்டு அதற்கான அனுமதியை மத்திய சர்க்காரிடத்தில் கேட்டிருக்கிறது. வந்தவுடன் இடத்தைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS